முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1517

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

24.11.2023, வெள்ளிக்கிழமை

1. மாதவ ராஜனே அரங்கா
மண்ணுலகம் காத்திடும் தேசிகா
பூதலத்தில் அரங்கன்உன் புகழ் உலகறிய
புண்ணிய பலமும் உலகமெங்கும் பரவ
2. பரவவே சுப்பிரமணியர் யானும்
பழுதின்றி ஞானஅறிவுரை ஆசி
அரங்கனுக்கு சோபகிருது தேள்திங்களில் உரைத்திடுவேன்
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 08 ம் நாள், 24.11.2023, வெள்ளிக்கிழமை)
ஆற்றல்பட அரங்கனே கலியின் சிறந்த ஞானி
3. ஞானியரின் உண்மை திருவடி பற்றி
ஞாலமதில் ஞானத்திருவடி நூல்தனையும் பெற்று
கோலமதாய் உலகோர் நித்தம் வாசித்து
குருஅரங்கன் காட்டும் அன்னதானத்தை
4. அன்னதானத்தை உலகெலாம் கிளைகளாக
அமைத்துமே தருமம் தொடர்ந்தால் போதும்
எண்ணமெல்லாம் ஞான வழிகளாகி
எங்கும் ஆறுமுகன்என் வெளிப்பாடு உதயமாகி
5. ஆகியே உலகோரை காக்கும்
அற்புதமான அறம்வேலி பெருகி இனிதே
மகிழவே மக்களுக்கு தேவைகள் பூர்த்திபட
மண்ணுலகத்தில் இடர்பாடுகள் ஏதும் பற்றாதவண்ணம்
6. வண்ணமுடன் சர்வ பாதுகாப்பு கூடி
வையகம் ஞானிகள் ஆட்சி காலமாக
வருங்காலம் ஆறுமுகன்என் தலைமை கொண்ட
வல்லமையான ஞானஆட்சி காலமாக மாற்றம் பெறும்

7. மாற்றத்தை ஆறுமுகன்யான் மகான் அரங்கன் தொண்டர்களை கொண்டு
தொண்டர்களை கொண்டு ஏற்றமாக இனிதே நடத்த இருக்க
இவ்வுலகோர் இணைந்து வந்தால் போதும்
இந்த அற்புதம் சடுதி காணும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–